செ.வெ.எண். 29/மார்ச் நாள்: 13.03.2017

## <u>தருமபுரி மாவட்டம்</u>

## <u>மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ. 55 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.</u>






தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூடுதல் கட்டிடத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (13.03.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 404 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

**முன்னதாக மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் வங்கி கடன் மானியம் தலா ரூ. 10 ஆயிரம் காசோலைகளை 4 நபர்களுக்கும் மற்றும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 15 மாணவ/மாணிவயர்களுக்கு ரூ. 15,000/-க்கான வங்கி வரைவோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் என மொத்தம் 19 பயனாளிகளுக்கு ரூ. 15 ஆயிரத்திற்கான வங்கி வரைவோலைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் திரு. கே.விவேகானந்தன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.சங்கர், தனி துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு. குப்புசாமி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி. இலாஹிஜான், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. பஷீர் அகமது,

மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட துறை ரீதியான அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி.